விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 85 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 02 இதழ் 59
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15 — 04 — 1993

## ★ தெரிவுக்குழுவின் தீர்வை திணிக்க வடக்கில் தாக்குதல்முஸ்தீபு

(கொழும்பு)
நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தீர்வைத் தமிழ்மக்கள் மீது திணிப்பதற்காக, வடக்கில் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காகப் படையினர் திட்டமிட்டு வருகிறு?

(2-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு விரைவில் கூடாது

(கொழும்பு)
நாடாளுமன்ற தெரிவுக்குழு உடனடியாகக் கூடும் சாத்தியமில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்க் கட்சிகளை இணக்கப்படுத்தி, அவற்றை மீண்டும் தெரிவுக் குழுக் கூட்டத்தொடரில் கலந்து கொள்ளச் செய்ய

(2ம் பக்கம் பார்க்க)

## இணைப்பிற்கு ஆதரவில்லை பிளவு பெரிதாகிறது

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பு இன்றித் தீர்விற்கு தமிழர் ஒத்துவரப்போவதில்லை. இதற்கு முஸ்லிம்களின் ஒத்துழைப்பும் நாடப்பட்டு புதிய யோசனையொன்று முன் வைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

அதாவது மாகாணங்களின் எல்லைகளை மாற்றியமைப்பது.

(2-ம் பக்கம் பார்க்க)

# ★ பலத்த பாதுகாப்பிலுள்ள மன்னாரில் புலிகள் தாக்குதல்

# இரு சிப்பாய்கள் உயிரிழப்பு

(மன்னார்)
மன்னாரில் இராணுவ காவலரண் மீது நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலுள்ள மன்னார்த்தீவிலேயே இச்சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

இதேவேளை அடிக்கடி விடுதலைப் புலிகள் இராணுவக்கட்டுப்பாட்டிலுள்ள மன்னார்த் தீவில் திடீர்த் தாக்குதலை நடத்துவதையிட்டு விசாரணை நடத்தி உரிய பாதுகாப்பு மேற்கொள்ளுமாறு பாதுகாப்பமைச்சு இராணுவ தலைமைப் பீடத்திடம் அண்மையில் கேட்டுக்கொண்டபோதும் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (சு-இ)

## ஆனையிறவு ஷெல்லுக்கு இருவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)
ஆனையிறவு முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் வீச்சிற்கு கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த இரு குடும்பஸ்தர்கள் பலியானார்கள்.

பூநகரி உதவி அரச அதிபர் பிரிவில் இச்சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது.

பெரியசாமி தங்கராசா (வயது-35, சாந்தி கிராமம் கோணாவில்) சந்தனம் முனியாண்டி (வயது-32, ஊற்றுப்புலம்) ஆகியோரே மரணமானவர்களாவர். (83-சி)

## இரவில்கிழக்கின் பெரும்பகுதி புலிகளின் பிடியிலே உள்ளது

### — பி. பி. ஸி. தகவல்

(மட்டக்களப்பு)
"கிழக்கு மாகாணம் அரசின் கட்டுப்பாட்டிலுள்ளதாக இலங்கை அரசு கூறியபோதும் உண்மையில் நிலைமை அப்படியல்ல. கிழக்கின் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகள் பகலில் ராணுவ கட்டுப்பாட்டிலும், இரவில் புலிகளின் கட்டுப்பாட்டிலும் இருக்கிறது".

இவ்வாறு அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டுவிட்டு திரும்பிய பி. பி. ஸி நிருபர் ஜஸ்மிந்தர் சிங் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இந்த ஆண்டில் ஜனாதிபதி பிரேமதாசா கிழக்குப் பகுதிக்கு விஜயம் செய்வுள்ளார் இந்தப் பகுதியை ராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறதென்று வெளியுலகுக்குக் காட்டுவதே அவரது விஜயத்தின் நோக்கமாகும். கிழக்கு மாகாணத்தில் போர் முடிந்துவிட்டதென்று ராணுவம் கூறுகிறது. ஆனால் தற்போது போர் அங்கு ஓயவில்லை.

மட்டக்களப்புக்கு செல்லும் சாலை வெளியெல்லாம் சிதறி கிடக்கும் கடைகளைக் காண

(4-ம் பக்கம் பார்க்க)

## 19 தமிழரை கிழக்கில் காணவில்லை

(மட்டக்களப்பு)
கிழக்கில் - மட்டக்களப்பில் அண்மையில் படையினரால் கைது செய்யப்பட்ட 19 தமிழர்களைக் காணவில்லை எனப் புகார் செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் இவர்கள்

(4ம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் ஊரடங்கு

(கொழும்பு)
மன்னார் மாவட்டத்தில் நேற்று பிற்பகல் 2 மணியிலிருந்து ஊரடங்கு அமுலில் இருப்பதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

மறு அறிவித்தல் வரை ஊரடங்கு அமுலில் இருக்கும் என கூட்டுப்படை தலைமையகம் அறிவித்துள்ளது. (கே-கி)

## ஐ. தே. க. — இ. தொ. கா. கூட்டிற்கு எதிர்ப்பு

(கொழும்பு)
அமைச்சர் தொண்டமானின் இ. தொ. காவுடன் இம்முறை தேர்தல் கூட்டு அமைத்தமைக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் பெரும் எதிர்ப்புத் தோன்றியுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து திரு. தொண்டமான் வெளியேறியதுடன், வடக்கு-கிழக்கு இணைப்பை அவர் வலியுறுத்துவது ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கைக்கு முரணானது எனக் கூறியே சில அமைச்சர்கள் உட்பட ஐக்கிய தேசியக்கட்சியில் ஒரு பகுதியினர் இக்கூட்டை எதிர்த்து வருகின்றனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## படை முகாம்கள் பலவற்றில் விமானங்கள் தயார் நிலையில்

(கொழும்பு)
வடக்கில் விடுதலைப் புலிகளின் திடீர் தாக்குதலை சமாளிக்கும் வண்ணம் பல முகாம்களில் யுத்த விமானங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அநுராதபுரம், திருமலை சீனக்குடா, வவுனியா, பலாலி படை முகாம்களில் சுப்பசொனிக். புக்காரா, 'எம் ஐ -8, ஹெலிகொப்

(4ம் பக்கம் பார்க்க)

## ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர் சுட்டுக்கொலை

(சென்னை)
இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள காவல்நிலையத்திலிருந்து ஈ.பி ஆர் எல். எவ். இயக்கத்தைச் சேர்ந்த சிவானந்தனின் நெருங்கிய கூட்டாளியான பாலசுப்பிரமணியம், நேற்று அதிகாலை பொலிஸ்காவலிலிருந்து தப்பி ஓட முயன்றபோது சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஒரிஸா மாநிலத்திலுள்ள முகாமிலிருந்து நவீன ரகத் துப்பாக்கியுடன் வெளியேறிய சிவானந்தன் நேற்று முன்தினமிரவு கைது செய்யப்பட்டதாகவும். இவர் கொடுத்த தகவலின்பேரில் பாலசுப்பிரமணியம் என்பவர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் காவலில் விசாரணைக்காக வைக்கப்பட்டிருந்தார். அவ்வேளையில் தப்பி ஓடியபோதே சுட்டுக் கொல்லப்பட்டார். (கே-கி)

## பிரிட்டனில் சிங்கள இளைஞர் வெள்ளையரால் சுட்டுக்கொலை

### இலங்கையர்கள் கொதிப்பு

(லண்டன்)
ஆசிய நாட்டவருக்கெதிரான தாக்குதல் சம்பவங்கள் பிரிட்டனில் அண்மைக்காலமாக அதிகரித்தவண்ணமுள்ளதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 23ம் திகதி பிரிட்டனில் கமரிசிமித் என்ற இடத்தில் சிங்கள இளைஞரான அமரிநாத் என்பவர் இரு

(2-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

கொரிவிக்ஸ், விவா, போத்தல்கள் தேவை. நபர் மூடியுடன் கூடியது. Taste Line Industries (PVT) Ltd, No: 14, Seenier Lane, Jaffna. (A-3024)

### சேவை

மக்கள் அபிமானத்தைப் பெற்ற ஸ்ரீலங்கா அச்சகம் ஸ்ரீலங்கா புத்தகசாலையுடன் இணையாமல் தனித்தே இயங்குகின்றதென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். ஸ்ரீகாந்தா அச்சக லேன், ராஜா தியேட்டர் அருகாமை - யாழ்ப்பாணம். (எ-3025)

### மீண்டு இயங்குகிறது

சோதிட விலாசபுத்தகசாலை 46, பெரியகடை, யாழ்ப்பாணம் சோதிட, வைத்திய, விஞ்ஞான புத்தகங்களும் பாடசாலைப்புத்தகங்களும், உபகரணங்களும் விற்பனையாகின்றன. ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சோதிடப்பிரகாச அச்சயந்திரசாலை, கொக்குவில். (எ-3022)

### வியாபாரிகளுக்கு

இரமாலை இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள், மணப்பெண் சோடனை நகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177-A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஒ 3042)

## இராசி பலன்

**15-04-1993**

**வியாழக்கிழமை**

**(தமிழுக்கு சித்திரை 02)**

நவமி பிற்பகல் 7-23 வரை திருவோணம் பி. இ. 1-58 வரை சித்தயோகம் இராகுகாலம் பிற்பகல் 1-34 முதல் 3-04 வரை சுபநேரம் மாலை 6-04 முதல் 7-34 வரை.

மேடம்: தொழில் முன்னேற்றம், கடன் வசூலாகும், செலவு.

இடபம்: எதிர்பார்ப்புகள் தோல்வி, நண்பர் பகை, வெறுப்பு.

மிதுனம்: தொழில் போட்டி அஞ்ஞாதவாசம், மனக்குழப்பம்.

கடகம்: பயணங்களால் துயரம், ஆசாரக்குறைவு, வேதனை.

சிங்கம்: காரிய ஜெயம், குடும்ப உல்லாசம், மழலைகள் சந்தோஷம்.

கன்னி: தொழில் லாபம், மேலதிகாரிகள் நன்மை, தான தருமம்.

துலாம்: பணமுடை, விருந்தினர் பகை, ஏமாற்றம்.

விருச்சிகம்: புதிய தொடர்பு மனைவி சகாயம், பயணச் சிறப்பு.

தனுசு: மனத்துயரம், உறவினர் தொல்லை, அடாவடித்தனம்.

மகரம்: பொதுசன மதிப்பு, குடும்ப சிறப்பு, சுபகாரிய செலவு.

கும்பம்: சகோதரர் வெறுப்பு, கடன்படல்- பழைய நினைவுகள்.

மீனம்: காரிய வெற்றி, பிணக்கு அகலும், விருந்து வைபவம்.

— ஜோஸ்யர்

உ

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

ஓம்



**அமரர் டாக்டர் கார்த்திகேசு சயலொளிபவன்**

(வண். சிவன் கிளினிக்)

மலர்வு: 12-07-1924 — உதிர்வு: 09-05-1991

திதி: 16-05-1993

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

மனைவி, மக்கள், குடும்பத்தினர்

27/40, புங்கங்குளம் வீதி
யாழ்ப்பாணம் (கி 4100)

### பிரிட்டனில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளையர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் தனது நண்பரான சிறில் பெர்னாண்டோவின் கடையில் நின்ற சமயமே சுட்டுக் கொல்லப்பட்டார் இவர் வழக்கறிஞராக பதவியேற்கவிருக்கும் சமயத்தில் சுட்டுக் கொல்லப்பட்டதையிட்டு இலங்கையர்கள் கொதிப்படைந்துள்ளனராம்.

மேலும் க்ரோயிடன் என்ற இடத்தில் 20 வயதான ஆசிய இளைஞர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேலும் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த ஆசிய இளைஞர் ஒருவரும் வெள்ளையர்களால் முகத்தில் கத்தியால் குத்தப்பட்டுள்ளார். (4-சி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழ் எழுத்தாளர்களாலேயே நிர்வகிக்கப்பட்டு ஆரம்பிக்கப் பெற்ற தமிழ் எழுத்தாளர் என்ற அமைப்பின் செயலகம் இன்று 15ம் திகதி வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்கு யாழ் ஆரிய குளம் சந்தி பருத்தித்துறை வீதியில் திறந்து வைக்கப்பட இருக்கிறது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அவர்களால் மேற்படி செயலகம் திறந்து வைக்கப்படும். பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் 'நந்தி' தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும். (56)

0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் 42வது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி நடைபெறும் கலைநிகழ்ச்சிகள் இன்று 15ம் திகதி வியாழக்கிழமை நிலைய அரங்கில் நடைபெறவுள்ளது. (154)

### தெரிவுக்குழு விரைவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீவிர முயற்சிகள் நடைபெறுவதால் அவை முடிவடைந்த பின்பே தெரிவுக்குழு கூடுமாம்.

இதேவேளை தமிழ்க் கட்சிகள் சில நிபந்தனைகளை முன்வைத்துள்ளனவாம். (சி)

### இணைப்புக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பகுதிகளில் சிறுபான்மையாகவுள்ள சிங்களவரும், முஸ்லிம்களும் சிறிய மாவட்டங்களில் தங்களின் நிர்வாகங்களை நடத்தலாம்.

இந்தப் புதிய ஆலோசனைக்கு இதுவரை ஆதரவு வந்ததாக இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணைப்பை ஏற்படுத்த எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு கிட்டாததால் பிளவு பெரிதாகி வருவதாக பி. பி. சி. நிருபர் தெரிவித்துள்ளார். (கே-சி)

### தெரிவுக் குழுவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எனக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் கூறுகையில்: தமிழர்களின் கோரிக்கைகளுக்கான வலுவை, அவர்களுடைய பேரம் பேசும் சக்தியை மட்டுப்படுத்தி, தெரிவுக் குழுவின் தீர்வுத் திட்டத்தை ஏற்கும்படி செய்வதற்காகவே, இராணுவத் தாக்குதலைப் பாரிய அளவில் நடத்த அரசு திட்டமிட்டு வருகிறது.

விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதன் மூலமாக மட்டுமே, தமிழர்களின் கோரிக்கைகளுக்கான வலுவைப் பலவீனப்படுத்தலாம் எனவும் அரசு கருதுகிறது. தமிழர்களின் பேரம் பேசும் சக்தி, விடுதலைப் புலிகளின் பலத்திலேயே தங்கியுள்ளது என்பதை அரசு நன்கு உணர்ந்துள்ளது எனவும் அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

உ

சிவமயம்

# ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சண்முகம் வேலுப்பிள்ளை**

மலர்வு: 1910-01-18 — உதிர்வு: 1992-04-26

திதி: 15-04-1993 (வியாழன்)

அன்புத் தந்தையே தெய்வமே ஐயா! நீங்கள் எங்களை விட்டு பிரிந்து ஓர் ஆண்டு என்றாலும் உங்கள் நினைவலைகள் எங்கள் இதயங்களில் நூறாண்டு காலம் நிலைத்திருக்கும் எங்களை வாழ வழிகாட்டிய தங்களின் ஆத்மா இறைவனின் பாதமலர்களில் சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

''அன்னை இல்லம்'',
சுதுமலை வடக்கு,
ஈஞ்சடி வயிரவர் கோவிலடி,
மானிப்பாய். (கி-1)

யாழ். செஞ்சிலுவைச் சங்க உபதலைவர்

**க. புவனேந்திரன்**

அவர்களின் சர்வதேச நியதிகளை மீறிய படுகொலையை கண்டித்தும் சமூகசேவையாளர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் கோரி சமூகசேவை அமைப்புக்களின் தொண்டர்கள் பணியாளர்கள் நடாத்தும்

# ஆர்ப்பாட்ட பேரணி

காலம்: 16-04-1993 வெள்ளிக்கிழமை காலை 9 மணி

இடம்: நல்லூர் கந்தசாமி ஆலய முன்றல்

இப்பேரணியில் சகல சமூக சேவை நிறுவனங்களின் தொண்டர்களும் ஊழியர்களும் மற்றும் சீருடை சார்ந்த செஞ்சிலுவைச்சங்க தொண்டர்கள், ஊழியர்கள், சாரணர்கள், திரிசாரணர்கள், கடற்சாரணர்கள், சாரணத் தலைவர்கள், சாரணத்தலைவிகள், பெண்கள்வழி காட்டிகள் (சாரணியர்) பரியோவான் முதலுதவிப் படையினர், தாதிகள் பிரிவினர், றோட்டறிக்கழக உறுப்பினர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், லியோக்கழக தொண்டர்கள், இன்றாக்ட் கழக தொண்டர்கள், மற்றும் சமூக சேவையாளர்கள் அனைவரையும் தத்தமது சீருடையுடன் அணி திரளுமாறு அப்பிரிவு சார்ந்த பிரதிநிதிகள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

செயலாளர்,

சமூக சேவை அமைப்புக்களின் தொண்டர், பணியாளர் ஒன்றியம்.

சட்டத்தரணி: விக்கினராசா.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
தலைமை அலுவலகம் (யாழ்ப்பாணம்)
கண்டி வீதி, யாழ்ப்பாணம்,

15-04-1993. (ஏ-3052)

★ இரண்டாயிரம் ஆண்டளவில் தமிழீழம் உருவாகும்:

# ஈழ விடுதலைப் போராட்டம் விரைவில்

# சர்வதேச அங்கீகாரம் பெற்றுவிடும்

## - அரசியல் நிபுணர்கள் நம்பிக்கை -

தமிழீழ விடுதலைப் போராட்டம் சர்வதேச அங்கீகாரம் பெறும் நிலைக்கு வளர்ந்து விட்டதாக சர்வதேச அரசியல் நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதனால் சர்வதேச மத்தியஸ்தம் மூலந்தான் இனப்பிரச்னைக்கு தீர்வு காணவேண்டிய நிலையும் ஏற்படும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச மத்தியஸ்தம் இன்றி இப்பிரச்னைக்கு தீர்வு காணமுடியுமென கருதவாய்ப்பில்லை. காரணம் அன்று பண்டா—செல்வா ஒப்பந்தம் முதல் இன்று நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின கவலைக்கிடமான நிலைவரை இங்குள்ள அரசியல் வாதிகளால் இப்பிரச்னைக்கு தீர்வுகாண முடியாதென்பது வரலாறு கற்றுத் தந்த பாடம். கடந்த காலங்களில் முதல் இன்றுவரை தொடரும் பேச்சுவார்த்தைகள் உடன்பாடுகள் என்பன எதனையும் சாதித்துக்கொள்ளவில்லை முரண்பாடுகளை த்தான் ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க

இரண்டாயிரம் ஆண்டில் உலக நாடுகளின் எண்ணிக்கை இருநூறாக அதிகரிக்கும் போது தமிழீழம் என்ற நாடும் இடம்பெறுமென சர்வதேச பூகோள புவியியல், அரசியல் நிபுணர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள்.

உலகம் இன்று 190 நாடுகளைக் கொண்டுள்ளது தமிழீழம், பஞ்சாப் ஆகிய நாடுகளுடன் இரண்டு நாடாகிவிடும். பிலிப்பைன்ஸிலிருந்து மின்டோரு, தென் ஆபிரிக்காவிலிருந்து அஸானியா, சூலாந்து, எத்தியோப்பியாவிலிருந்து நிக்ரோ சூடானிலிருந்து சையீர், சீனாவிலிருந்து திபெத் ஆகியன விரைவில் உலக வரைபடத்தில் இடம்பெறவிருக்கும் புதிய நாடுகள் என ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டின் முடிவில் உலக வரைபடம் எப்படி இருக்கும் என்பது குறித்து ஆய்வு நடத்திய உலக பூகோள, அரசியல் அறிஞர்கள், அப்போது இலங்கையின் வட, கிழக்கு பகுதியில் தமிழீழம் என்ற நாடு இருக்கும் என்று தெரிவித்துள்ளனர்

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் ஆதரவுடன் உலகின் முன்னணி அரசியல் பூகோள அறிஞர்கள் நடத்திய இந்த ஆய்வின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையிலே மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக அரசியல் வரைபட ஆணைக்குழுவின் தலைவர் டேவிற்நைற் தலைமையிலான இந்த அறிஞர்கள் குழு சமர்ப்பித்துள்ள இந்த அறிக்கையில் 2000 ஆண்டில் உலகில் 300 நாடுகள் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சோவியத் யூனியனில் ஏற்பட்ட பிளவு, யூகோஸ்லாவிய பிரிவு ஆகியவற்றால் அடிக்கடி உலக வரைபடத்தை மாற்ற வேண்டியேற்பட்டது என்று தெரிவித்துள்ள இந்த அறிஞர்கள் 2000 ஆண்டிற்குமுன்னர் உலகவரைபடத்தில் ஏற்படவுள்ள மாற்றங்கள் குறித்து விபரித்துள்ளனர். (நி)

---

உதவியற்ற நோயாளரை

## பராமரிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

உதவியற்ற நோயாளரை உடனிருந்து பராமரிப்பதற்கு யாழ். ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரிச்சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

வெளி மாவட்டங்களைச் சேர்ந்த உதவியற்ற நோயாளர்களுக்கும் உதவி தேவைப்பட்டால் பராமரிப்பாளர். உணவு, தங்குமிடவசதி போன்றவற்றை வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

வறிய நோயாளி இறந்தால் அவர்களது குடும்பத்திற்குத் தகவலனுப்புதல்: பிரேதப் பெட்டி, வாகன ஒழுங்கு என்பவற்றையும்சங்கம்ஏற்படுத்தியுள்ளது.

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நோயாளி வருமானமற்றவராயிருப்பின் அவருக்கு தேவையான பாலிமா, மாற்றுடை போன்றவற்றையும் நோயாளர் நலன்புரிச்சங்கம் வழங்கி வருகிறது. (159)

---

நிர்வாக சேவை பரீட்சைக்கு

# கிராம சேவகர்கள் தோற்ற

## விரைவில் அனுமதிக்கப்படுவர்

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவை பரீட்சைக்கு கிராமசேவகர்களும் தோற்றுவதற்கு அனுமதிப்பது என்று பொது நிர்வாக அமைச்சு முடிவுசெய்துள்ளது என்று அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

கிராம சேவகர்கள் இலங்கை நிர்வாக சேவையில் உயர் பதவிகளை வகிப்பதற்கு புதிய முறை வழிவகை செய்துள்ளது.

கடந்த 19 வருட காலமாக பதவிஉயர்வு எதுவுமின்றி கஷ்டப்பட்ட கிராமசேவகர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி)

---

# சைக்கிளில் சென்றவர் மயக்கமுற்று மரணம்

(ஆனைப்பந்தி)

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் வீதியில் மயக்கமுற்று விழுந்து மரணமானார்.

நாவற்குழி வவனியா குடியிருப்பில் வசித்து வந்த ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கிறிஸ்தோத்திரம் அல்பிரட் (வயது 53) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

கடந்த திங்கள் அன்று கிளாலி நோக்கி சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இவர் கைதடிச் சந்திக்கு அண்மையில் திடீரென மயக்கமுற்று அந்த இடத்திலேயே மரணமானதாகக் கூறப்படுகிறது. (101-159)

---

# கஞத்துறை முகாமிலுள்ள தமிழ்கைதிகள் கடிதங்கள்

(யாழ்ப்பாணம்)

களுத்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தமது உறவினர்களுக்கு அனுப்பிய கடிதங்களை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் எடுத்து வந்துள்ளார்.

இவற்றை இன்று வியாழக்கிழமை முதல் யாழ்ப்பாண செயலகத்தில் அரச அதிபரிடம் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாமென அரசஅதிபர் அறிவித்துள்ளார். (159)

---

### திருட்டு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்திற்கருகிலுள்ள ஒரு வியாபார நிலையத்தில் அண்மையில் பெறுமதிமிக்க பொருட்கள் திருடப்பட்டுள்ளது. (71)

---

# கடும் வரட்சியால் சிறுதானியங்கள் அழிவு

(உடுவில்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக சிறுதானியப் பயிர்கள் எரிந்து அழிந்து போகும் ஆபத்து நிலை தோன்றியுள்ளது

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும் போக செய்கை முடிவடைந்த பின்னர் பல விவசாயிகள் பயறு, எள்ளு, சணல், குரக்கன் போன்ற சிறுதானிய பயிர்களை செய்கை மேற்கொள்ள முன்வந்தனர்.

கிராமிய உற்பத்திக்குழுக்கள் மூலம் விவசாய பகுதியினரும் சமநலசேவை நிலையத்தினரும் சிறுதானிய உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு விதைதானியங்களையும், பசளை வகைகளையும் மண்ணெண்ணெய் போன்றவற்றையும் கடனடிப்படையிலும் மானியமாகவும் கூட வழங்கி இருந்தனர்

ஆனால் குடாநாட்டில் தற்போது நிலவும் கடும் வெய்யில், வரட்சி காரணமாக மேற்படி பயிர்கள் எரிந்து அழியும் நிலையை எதிர்நோக்கியுள்ளன நீர் பாய்ச்ச வசதியுள்ள இடங்களில் ஓரளவு நீர்ப்பாசனம் செய்யப்பட்ட போதிலும், பல ஹெக்டேர் நிலங்களில் சிறுதானிய பயிர்கள் அழிவுறும் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (109)

---

### பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கிலே கால்நடை வளர்ப்போர்களுக்கான பயிற்சி வகுப்பினை நடாத்துவதற்கான ஒழுங்கினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் யாழ். கடற்புலிகள்) மேற்கொண்டுள்ளது.

இந்த பயிற்சி வகுப்பிலே கால்நடைகளுக்கான நோய்களின் அறிகுறி முதலுதவி வளர்ப்பு முறைகள் பற்றியும் விளக்கவுரைகள் வழங்கப்படவுள்ளன.

---

# சிருடைகளுடன் பேரணியில் கலந்துகொள்ள தொண்டர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சமூக சேவையாளர்களின் உயிருக்கு உத்தரவாதமளிக்கக்கோரியும் செஞ்சிலுவைச் சங்க உப-தலைவர் அமரர் க. புவனேந்திரனின் சர்வதேச நியதிகளின் மீறிய படுகொலையைக் கண்டித்தும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் கோவில் முன்றலில் ஆரம்பமாகவுள்ள பேரணியில் சீருடையில் கலந்து கொள்ளுமாறு தொண்டர் அமைப்புக்களுக்கும் சமூக சேவையாளர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள், ஊழியர்கள், சாரணர்கள், திரிசாரணர்கள், சாரணத்தலைவர்கள், குருளைச் சாரணத் தலைவர்கள் பெண் சாரணியர்கள் (வழிகாட்டிகள்) சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவுத் தொண்டர்கள், தாதிகள் பிரிவு ரோட்டரிக்கழகம், லயன்ஸ் கழகம், வைஎம்சிஏ, லியோ கழகம், இன்றட் கழகம் மற்றும் சமூகசேவை இயக்கங்கள், தொண்டர் ஸ்தாபனங்களைச் சேர்ந்த சகல சேவையாளர்களையும் இப் பேரணியில் கலந்துகொள்ளும்படி இவ்வமைப்புக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வடமராட்சி, தென்மராட்சி சேவையாளர்களுக்கு போக்குவரத்துசேவை ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (நி)

---

# பனை வெல்லத்திற்கு விலை நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

தற்போதுள்ள பதனீர் உற்பத்திக் காலத்தை பயன்படுத்தி பனை வெல்ல உற்பத்தி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு கிலோ பனைவெல்லத்தின் சில்லறை விற்பனை விலை 40 ரூபாவாகவும், மொத்த விற்பனை விலை 37 ரூபாவாகவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், பனை அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் விற்பனை நிலையங்களிலும் தனியார் விற்பனை நிலையங்களிலும் இதனைப் பெற்றுக்கொள்ளலாம்.

---

# 'செஞ்சொற் சீராளன்' பட்டமளித்து பாராட்டு

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு கொக்குவில் மேற்கு மணியம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவ காலத்தில் தொடர்ந்து பத்து தினங்கள் கந்தபுராண சொற்பொழிவுகளை நிகழ்த்திய காரைநகர் சம்பவகழக அமைப்பாளரும்யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியருமாகிய திரு. த. சிவகுமாரனுக்கு மேற்படி ஆலய பரிபாலன சபை சார்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைத்துறை பீடாதிபதி திரு. பொ பாலசுந்தரம்பிள்ளை "செஞ்சொற் சீராளன்" என்னும் கௌரவப் பட்டமளித்துப் பாராட்டுப் பத்திரம் வழங்கினார்.

பரிபாலனசபைத் தலைவர் திரு. இ. அன்னலிங்கம்பொன்னுத்துரை போர்த்தி வெள்ளிக் கேடயம் வழங்கிக் கௌரவித்தார். யாழ். மாவட்ட பதில் ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் திரு. சிவகுமாரனை பாராட்டி உரைநிகழ்த்தினார்.

பல அதிபர்களும் அறிஞர்களும் கலந்து கொண்ட மேற்படி விழா ஒழுங்குகளை பரிபாலன சபைச் செயலாளர் திரு. து. துரைநாயகம்மேற்கொண்டிருந்தார்.

---

### விளையாட்டு மைதானம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர் கனிஷ்ட மகாவித்தியாலயத்தின் விளையாட்டு மைதான விஸ்தரிப்பு வேலைகள் பாடசாலை அபிவிருத்தி சங்க ஆதரவுடன் ஆரம்பமானது. (83)

---

# உயிரிலும் அன்னை பூபதி

அன்னையர்க்கு அரணாய் உள்ளாய்
ஆண்டவனின் அரவணைப்பாய் உள்ளாய்
இன்னலுறும் எமக்கு உயிரைத் தந்தாய்
ஈற்றிலும் ஈழத்தில் ஒளியைத் தந்தாய்
உயிரினும் மேலாய் தமிழை வளர்த்தாய்
ஊயிருடன் உத்தமியாய் நின்றாய்
எல்லையில்லா உணர்வு உள்ளம் உனக்கு
ஏழுலகமும் வியந்து பார்த்தது தாயே
ஐயமுண்டு அன்னியர் ஆட்சியின்போது
ஒன்று பட்டோம் அதை எதிர்த்தோம்
ஓங்கு புகழ் ஈழத்தில் பெற்றாய்
ஒளவைக்கு ஈடாகிய அன்னை பூபதியே.

மு வே. அன்பழகன்

## மரண அறிவித்தல்

### நடராசா தர்மகுலேந்திரன்

காரைநகர் அல்வின் வீதியை சேர்ந்த நடராசா தர்மகுலேந்திரன் (ருதா) 12-04-1993-ல் அகால மரணமானார். இவர் (செல்லன் நடராசா நாகேஸ்வரியின் புதல்வனும் நகுலேந்திரன், புலேந்திரன், காலஞ்சென்ற சுகந்தினி, பாலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் நெல்லியான் சுழிபுரத்தில் உள்ள எமது தந்தையின் இல்லத்தில் 13-04-93 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனுதாபிகள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்: ந. நகுலேந்திரன்

தற்காலிகமுகவரி;
நெல்லியான் வீதி, சுழிபுரம். (கி-10)

### திரு. கதிரவேலு செல்லப்பா

திரு. கதிரவேலு செல்லப்பா காலமானார். இவர் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் இராசரத்தினம், இராஜலட்சுமி, ஆகியோரின் அன்புத்தந்தையும், பொன்னையா அவர்களின் அன்பு மாமனாரும், திருமதி பரமேஸ்வரன் பவானி, செல்வி சாந்தினி, தயாபரன், திருச்செல்வம், பிரகாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் பிரதீபாவின் அன்புப் பூட்டனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியை இன்று வியாழக்கிழமை (15-04-93) காலை 11-00 மணியளவில் நடைபெற்று சங்கானை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: செ. இராசரத்தினம் (C.R) (மகன்)

தேவாலயவீதி,
சங்கானை. (சி-09)

நயினாதீவு

### கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை

(முன்னைநாள் சாந்திலொச் உரிமையாளர்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் 101, 2-ம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை 14-04-93 புதன்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளையின் அன்புக்கணவரும் வசந்தாதேவி யாழ். வேம்படி மகளிர்கல்லூரி ஆசிரியை), முன்னாள் கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியை!, Dr. சாரதாதேவி, விமலாதேவி (முன்னாள் யாழ்.வேம்படிமகளிர்கல்லூரி ஆசிரியை), காலஞ்சென்ற வசந்தராசா, சாந்ததேவி (Lon) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற Dr. தனபாலசிங்கம், முன்னாள் வைத்தீஸ்வராக்கல்லூரி ஆசிரியர் சிவஞானம், சூரியகுமார் (Lon), ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரது ஈமைக்கிரிகைகள் (15-04-93) இன்று வியாழக்கிழமை 2-ம் குறுக்குத் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3-00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: திருமதி. வ. தனபாலசிங்கம்

101, 2-ம் குறுக்குத்தெரு. (மகள்)
யாழ்ப்பாணம். (கி-11)

### ஒப்பிலாமணி வள்ளியம்மை

(நீலிப்பந்தனை, காரைநகர்)

காரைநகர் நீலிப்பந்தனையை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஒப்பிலாமணி வள்ளியம்மை 14-4-1993 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஒப்பிலாமணியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கண்மணி திருமதி புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை, பாலசிங்கம் (ப. நோ. கூ. சங்கம் காரைநகர்), வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்றவர்களான கனகசபை, சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தில்லையம்பலம் கணபதிப்பிள்ளை, புவனேஸ்வரி, பாலசரஸ்வதி, ஆகியோரின் அன்புமாமியாரும் சிவபாதசுந்தரம் - சேதீஸ்வரி, பத்மாவதி, கதிர்காமநாதன், இராமகிருஷ்ணன், ஜானகி, இராதாகிருஷ்ணன், சித்திரா, மகேஸ்வரன், ஜெகதீஸ்வரன், சோதீஸ்வரன், ஆகியோரின் அன்புப்பேர்த்தியாருமாவார் அன்னாரின் ஈமக்கிரிகைகள் 14-4 93 பி. ப. 2 மணியளவில் நாகேந்திரமடம் அராலி வடக்கில் நடைபெற்று தகனக்கிரிகைகள் அராலி இந்து மயானத்தில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஒ. பாலசிங்கம் (மகன்)

நாகேந்திரமடம்,
அராலி வடக்கு. [கி-12]

## தமிழ்ப் பகுதிகளிலிருந்து படைகளை அகற்றுமாறு கோரிக்கை

### சிறினிவாசன் எம். பி. கடிதம்

(கொழும்பு)

"தமிழ்ப் பகுதிகளிலிருந்து இராணுவப்படைகளை அகற்றுவதன் மூலம் சிங்களவர்கள் எதனையும் இழந்துவிடப் போவதில்லை மாறாக இரு தரப்புகளிலும் ஏற்படும் உயிரிழப்புகளை தவிர்க்கமுடியும்".

இவ்வாறு யாழ் மாவட்ட எம். பி. கே. சிறினிவாசன், மங்கள முனசிங்கா தலைமையிலான நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்

சகல மக்களின் அழிவுக்கும், விரயத்திற்கும் ஏற்படும் செலவை, மக்களின் நலனுக்கு செலவு செய்து நாட்டினை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (கே-சி)

**படை முகாம்**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டர்கள், பொம்மர்கள் தயார் நிலையில் உள்ளதாம்

இதேவேளை வடக்கில் புலிகளின் தாக்குதலை சமாளிக்கும் விதத்தில் மேலதிக படையினரும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது (சி)

**19 தமிழரை**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எந்தப் படை முகாமிலும் இல்லை எனப் படையினர் கைவிரித்து விட்டனராம். இது குறித்து மனித உரிமை அமைப்புக்களிடமும் புகார் செய்யப்பட்டுள்ளது.

கிழக்கில் தமிழர் காணமற் போகும்சம்பவங்கள்தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக பி.பி ஸி. தெரிவித்தது. (சி)

**ஐ தே. க.**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை தோட்டத் தொழிலாளரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல புதிய அரசியல் அமைப்புக்கள் இ.தொ.காவுக்குப் போட்டியாகத் தேர்தல் களத்தில் குதித்துள்ளதால், ஐக்கிய தேசியக்கட்சியுடன் கூட்டுச் சேரவேண்டிய ஒரு நிலை இ.தொ.கா.வுக்கு ஏற்பட்டுள்ளதாம். (சி)

**இரவில்**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடிகிறது. ராணுவத்தினரின் சோதனை நிலைகளையும் இவ் வழியிலே அதிகம் காணலாம்.

வெலிகந்த, வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் காணப்படும் நெடுஞ்சாலையோரமரங்கள் எல்லாம் தறிக்கப்பட்டு வெட்டவெளியாகக் காணப்படுகின்றன.

காடுகளை அழிப்பது சுற்றுச் சூழலை பாதிக்கும் என அரசு பிரசாரம் செய்கிறது. ஆனால் இங்கே ராணுவம் தங்கள் பாதுகாப்புக்காக காடுகள் அழித்து வெட்ட வெளியாக்கப்படுவதை சர்வசாதாரணமாகக் காண முடிகிறது.

கொழும்பையும் மட்டக்களப்பையும் இணைக்கும் இந்த ஒரே நெடுஞ்சாலை ஜனாதிபதியின் விஜயத்தையொட்டி மேலும் அதிகரித்த காடு அழிப்பு வேலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

கடைகள் பகலில் திறக்கப்படுகின்றன. சாலைகளும் பகலில் ராணுவக் கட்டுப்பாட்டுக்குள் சில பகுதிகளில் உள்ளன. ஆனால் நகரின் அப்பாலுள்ள பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டிலே தான் உள்ளன.

பல இடங்களில் இரு தரப்பாரிடையேயும்எழுதப்படாத உடன்பாடு காணப்படுவதாகத் தோன்றுகிறது. பகலில் விழிப்புடன் இருக்கும் இராணுவம், இரவில் தம் பாசறைக்குச் சென்றதும் புலிகள் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக அறியப்படுகிறது.

இதேவேளை புலிகளுக்கு எதிரான குழுக்களை அரசு பயன்படுத்துவது இப்பகுதிகளில் சர்ச்சையை கிழப்பியுள்ளது. இந்த இயக்கங்களை சார்ந்தவர்கள் மக்களை பயமுறுத்தி பணம் பறிப்பதாக குற்றச்சாட்டும் எழுந்துள்ளது என்றார். (கே-சி)

'அகத்' கப்பல் விவகாரம்:

## அமெரிக்க வழக்கறிஞரின் உதவியுடன் ஆஜர்

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு பயணம் செய்த கப்பல் கப்டன் ஜெயச்சந்திரன் சார்பில் வழக்கறிஞர் துரைச்சாமி நீதிமன்றத்தில் ஆஜராவுள்ளார்.

இந்த வழக்கில் அமெரிக்க வழக்கறிஞர் கியானுதோ, கப்பல் கப்டன் ஜெயசந்திரன் சார்பில் ஆஜராக இருந்த போதிலும், இந்திய நீதிமன்றத்தில் அவர் பதிவு செய்யப்படாததால் அவர் ஆஜராக முடியவில்லையாம்.

தற்போது சென்னையில் தங்கியிருக்கும் அமெரிக்க வழக்கறிஞர் கியானுதோ, ஜெயச்சந்திரன் வழக்கில் ஆஜராகும் வழக்கறிஞர் துரைச்சாமிக்கு ஆலோசகராகக் கடமையாற்றுவார். (சு-கி)

## புதிய பஸ் நிலையம் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பஸ் நிலையத்தின் புதிய இடஅமைவு யாழ் ரயில் நிலையத்திற்குப் பின்புறமான காணியில் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது. இதனை யாழ். மாவட்டச் சிறப்புத் தளபதி செல்வராசா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

சிற்றூர்தி சேவைகள் சங்கத் தலைவர் திரு அ. அமிர்தராஜா தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் மங்கல விளக்கை யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு வே. பொ. பாலசிங்கம் ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, யாழ் மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. ஜவான், யாழ். மாவட்டத் தளபதி திரு. அன்பு ஆகியோர் கலந்து கொண்டனர். [158-சி]

## அமைதியான இடத்தில் பஸ் நிலையம் அமைகிறது

(யாழ்ப்பாணம்)

"வைத்தியசாலைகளுக்கு அண்மையில் பஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டிருப்பதனால் வைத்தியசாலை நோயாளிகளுக்கு இடையூறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டாகிறது நோயாளிகளுக்கு இடையூறுகள் ஏற்படுவது தவிர்க்கப்படவேண்டும். அந்த வகையில் யாழ். மத்திய பஸ் நிலையம் நல்லதொரு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது வரவேற்கத்தக்கதொன்றாகும்.

இவ்வாறு ஸ்ரான்லி வீதியில் புதிய பஸ் நிலையத் திறப்புவிழாவில் விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்: சிலரின் குறுகிய நோக்கத்தினால் கழிவு நீர் போகவேண்டிய இடங்களில் மக்கள் குடியிருப்புக்கள் இருக்கின்றன. அப்படியல்லாமல் வைத்தியசாலையும் ஓர் அமைதியான சூழலில் அமைந்திருக்கவேண்டும் என்றார். (158 கி)

## லலித் கூட்டத்திற்கு அரசு முட்டுக்கட்டை

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபைத் தேர்தலில் பிரசாரம் மேற்கொள்வதற்கு அரசாங்கம் பல முட்டுக்கட்டைகளைப் போடுகிறதென்று ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்

தமது கட்சியின் சார்பில் போட்டியிடும் குவதுங்க என்பவர் நீர்கொழும்புப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகலில் கூட்டம் நடத்துவதற்கு குருநாகல் நகர சபை அனுமதி தரவில்லை அதனால் தனியாரின் இடம் ஒன்றில் கூட்டம் நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்விரண்டு காரணங்களுமே அரசு ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரங்களுக்கு எவ்வளவு தொந்தரவைத் தருவது புரிவதாக அத்துலத் முதலி மேலும் தெரிவித்துள்ளார். (சு-கி)

கொழும்பு செல்லும்

## நோயாளருக்கு

யாழ்ப்பாணம்)

கொழும்புக்கு வைத்திய சிகிச்சைக்காகத் தெரிவு செய்யப்பட்ட நோயாளிகளும், அவர்களுடன் கூடச் செல்பவர்களும் தங்களுக்கு இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீருடன் யாழ். அரசினர் வைத்தியசாலையில் நாளை வெள்ளி காலை 7-00 மணிக்குத் தவறாது சமுகம் அளிக்குமாறு யாழ் வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். [56]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Srilanka under licence Number B/10836/B